பழங்குடியினர் நல இயக்குநரகம்

அனுப்புநர்
திரு.V.C. ராகுல், இ.வ.ப.,
இயக்குநர்,
பழங்குடியினர் நல இயக்குநரகம்,
சேப்பாக்கம்,
சென்னை 600 005.

பெறுநர்
மாவட்ட ஆட்சியர் ,
தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கள்ளக்குறிச்சி, நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், சேலம், திருவண்ணாமலை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் மாவட்டங்கள்.

ந.க.எண். பமே/ஈ1 /3141/2019 , நாள். 03.12.2020.

அய்யா/அம்மையீர்,

பொருள்: பழங்குடியினர் நலம் - கல்வி – 2020 – 2021ஆம் கல்வி ஆண்டில் அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் காலியாக உள்ள இடைநிலை/பட்டதாரி/ முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதியத்தில் நிரப்புதல் – தொடர்பாக.

பார்வை: 1 அரசாணை (நிலை) எண்.15, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந7)துறை, நாள். 07.02.2020.

2 அரசுக் கடித எண். 104, ஆதிந7/2019, நாள்.17.10.2020.

∞∞∞∞

அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் காலியாக உள்ள இடைநிலை/ பட்டதாரி/ முதுகலைபட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதியத்தில் நிரப்பிட பார்வை (1)ல் அரசு ஆணையிட்டுள்ளது.

மேற்கண்ட ஆசிரியர்களுக்கு மாத ஊதியமாக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ.10,000/– பட்டதாரிஆசிரியர்களுக்கு ரூ.9,000/– இடைநிலை ஆசிரியர்களுக்கு ரூ.8,000/– என்ற விகிதங்களில் கல்வி ஆண்டு முடியும் வரை (கோடை விடுமுறை தவிர்த்து) அல்லது காலிப்பணியிடங்கள் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் ஆசிரியர்களை கொண்டு முறையாக நிரப்பப்படும் வரை ஊதியம் வழங்கப்படும்.

தங்கள் மாவட்டத்தில் இயங்கும், அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை, தகுதியுள்ள பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை பணியமர்த்திட எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு, வகுப்பு நடத்துதல் தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் நிரப்பப்படும் என்ற விவரங்களை செய்தி தாள்கள் மூலமாக விளம்பரம் செய்திட கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட வாரியாக ஆசிரியர் காலிப்பணியிட விபரம் இணைக்கப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

இப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் அதற்கான விண்ணப்பத்தை தொடர்புடைய மாவட்ட திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலம்) / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரிடம் பெற்று பூர்த்தி செய்து அவ்விண்ணப்பங்களை 24.12.2020–க்குள் சமர்ப்பிக்க ஏதுவாக உள்ளூர் தமிழ் செய்தி நாளேடுகளில் 09.12.2020 அன்று உரிய விளம்பரம் செய்ய விரைவு நடவடிக்கை மேற்கொள்ள கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பரிசீலனை செய்து தங்கள் மாவட்டத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை (பாடவாரியாக) 28.12.2020–க்குள் அறிக்கையாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

<u>தேர்வு நடைபெறும் நாள் மற்றும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்.</u>

<u>இணைப்பு:-</u>

1. மாவட்ட வாரியான ஆசிரியர் காலிப்பணியிட விபரம்.
2. மாதிரி விண்ணப்ப படிவம்

ஒம்./–V.C. ராகுல்,
பழங்குடியினர் நல இயக்குநர்.

பழங்குடியினர் நல இயக்குநருக்காக

<u>நகல்:</u>

1. திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலம்),
   தருமபுரி, நாமக்கல், சேலம், திருச்சி, திருவண்ணாமலை,
   திருப்பத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள்.

2. மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
   பழங்குடியினர் நல அலுவலர்,
   திண்டுக்கல், ஈரோடு, கன்னியாக்குமரி,
   நீலகிரி, பெரம்பலூர் மற்றும் திருநெல்வேலி
   மாவட்டங்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவரை தொடர்பு கொண்டு உடன் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு.

Scanned with CamScanner

ந.க.பமே/ஈ1/3141/2020, நாள்.03.12.2020–ன் இணைப்பு

## தொகுப்பூதிய ஆசிரியர்கள் நியமனம் – காலிப்பணியிடங்கள் விபரம்

| வ. எண். | மாவட்டம் | முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் | | | | | | | | | | | | | பட்டதாரி ஆசிரியர் | | | | | | இடைநிலை ஆசிரியர் | ஆக மொத்தம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தமிழ் | ஆங்கிலம் | கணிதம் | இயற்பியல் | வேதியியல் | தாவரவியல் | விலங்கியல் | உயிரியல் | வணிகவியல் | பொருளியல் (Economics) | வரலாறு | கணினி பயிற்றுநர் | மொத்தம் | தமிழ் | ஆங்கிலம் | கணிதம் | அறிவியல் | சமூக அறிவியல் | மொத்தம் | | | |
| 1 | கோயம்புத்தூர் | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 2 | திண்டுக்கல் | | 1 | 1 | | | | | | | | | | 2 | | 1 | | | | 1 | 2 | 5 | |
| 3 | தருமபுரி | | | | 1 | | | | 1 | | | | | 2 | 3 | | 1 | 3 | 1 | 8 | 7 | 17 | |
| 4 | கன்னியாகுமரி | | | | | 1 | 1 | | | | | | 1 | 3 | 1 | | | 1 | | 2 | | 5 | |
| 5 | கள்ளக்குறிச்சி | | 1 | 1 | 1 | 2 | 1 | | | | | 1 | | 7 | | 4 | 3 | 6 | | 13 | | 20 | |
| 6 | பெரம்பலூர் | | | | | | | | | | | | | | 1 | 1 | | | 1 | 3 | | 3 | |
| 7 | வேலூர் (ம) திருப்பத்தூர் | | | | | | | | | | | | | | | | 1 | | 1 | 2 | 9 | 11 | |
| 8 | தென்காசி | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 9 | திருவண்ணாமலை | 1 | | | | 1 | | | | | | | | 2 | | | | | 3 | 3 | | 5 | |
| 10 | நாமக்கல் | | 1 | | | 1 | | | 2 | | 2 | | 1 | 7 | | | 1 | 2 | 2 | 5 | 1 | 13 | |
| 11 | ஈரோடு | | | | 1 | 1 | | | | | | | | 2 | 1 | 5 | 7 | 7 | | 20 | 1 | 23 | |
| 12 | திருநெல்வேலி | | | | | | | | | | | | | | 1 | | | | | 1 | | 1 | |
| 13 | திருச்சிராப்பள்ளி | | | 1 | | | 1 | | | | | | | 2 | | 1 | | 1 | 1 | 3 | 7 | 12 | |
| 14 | சேலம் | 3 | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | 1 | 2 | | 2 | | 21 | 4 | 11 | 11 | 7 | 4 | 37 | 6 | 64 | |
| 15 | நீலகிரி | | | | | | | | | | | | | | 3 | 4 | 4 | 5 | 3 | 19 | | 19 | |
| | மொத்தம் | 4 | 6 | 5 | 5 | 8 | 5 | 2 | 4 | 2 | 2 | 3 | 2 | 48 | 14 | 27 | 28 | 32 | 16 | 117 | 33 | 198 | |

பழங்குடியினர் நல இயக்குநருக்காக

பழங்குடியினர் நலத்துறை

## தொகுப்பூதிய ஆசிரியர் பணிநியமனத்திற்கான விண்ணப்பப்படிவம்

கோரும் பணியிடம் : (முதுகலை ஆசிரியர்/பட்டதாரி ஆசிரியர்/இ.நி.ஆசிரியர்)

( ✓ செய்யவும் )

புகைப்படம்

1. விண்ணப்பதாரர் பெயர் தமிழ் :

   ஆங்கிலம் :

2. தகப்பனார் பெயர் :

3. பிறந்த தேதி :

4. நிரந்திர முகவரி :

5. கைப்பேசி எண் :

6. இனம் (சாதிச்சான்றிதழ் இணைக்கப்படவேண்டும்) :

7. வேலைவாய்ப்பு பதிவு எண் (நகல் இணைக்கப்படவேண்டும்) :

8. கல்வித்தகுதி

   a) இடைநிலைக்கல்வி: (SSLC)
      i) பெற்ற மதிப்பெண்கள் : /500
      ii) தேர்ச்சி பெற்ற மாதம் மற்றும் ஆண்டு :
      iii) தேர்வு வாரியத்தின் பெயர் :

   b) மேல்நிலைக்கல்வி : (HSC)
      i) பெற்ற மதிப்பெண்கள் :
      ii) தேர்ச்சி பெற்ற மாதம் மற்றும் ஆண்டு :
      iii) தேர்வு வாரியத்தின் பெயர் :

Scanned with CamScanner